2013 மார்ச் 25]

திரு. எம். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரந்தை பகுதியிலே புதிய துணை மின் மாற்றியை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தஞ்சை தொகுதியின் வளர்ச்சிக்காக பல்வேறு சலுகைகளையும், திட்டங்களையும் அறிவித்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

47—

தொகுப்பு வீடுகள்

***19682—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் பழுதடைந்துள்ள பழைய தொகுப்பு வீடுகளைச் செப்பனிட நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடை. (அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/–க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய விடிவெள்ளி, ஏழையெளிய மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக்கொண்டிருக்கக்கூடிய, காவிரியை மீட்டெடுத்த எங்கள் காவியத் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட ஓழையூர், கொட்டிவாக்கம், முட்டவாக்கம், மேல்ஒட்டிவாக்கம், பெரும்பாக்கம், சிறுபாக்கம், வேலியூர், விசார் போன்ற பல்வேறு கிராமங்களில் கட்டப்பட்டுள்ள பழைய தொகுப்பு வீடுகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அதன் மேல்தளங்களில் விரிசல் ஏற்பட்டு மழைக் காலத்தில் ஒழுகும் நிலையில் உள்ளன. அதைச் சரி செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி, அதற்கான நிதியை ஒதுக்கித் தந்ததோடு, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலே இருந்தும் அதை சரி செய்வதற்கு உத்தரவிட்ட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

முற்பகல் 10—10

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே பல்லாயிரக்கணக்கான தொகுப்பு வீடுகள் தொடக்கக் காலத்திலிருந்து, அதாவது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே இருந்து பழுதடைந்து கிடக்கின்றன. இவ்வளவு வீடுகளும் குறிப்பாக தலித் மக்கள் குடியிருக்கக்கூடிய பகுதிகள் புனரமைக்கப்படாமல் கிடக்கின்றன. அவர்களால் புனரமைக்க முடியவில்லை. அது அரசுக்கும் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். கடந்த காலங்களில், அதற்கென்று

2013 மார்ச் 25]

ஒரு குறிப்பிட்ட தொகையை அரசு ஒதுக்கி வந்தது. அதை நிறுத்தியதனுடைய விளைவுதான் இப்போது அந்த மக்களால் எதுவும் செய்ய முடியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, 25 ஆயிரம் ரூபாய் வழங்குவதனால் மட்டும் இதை செய்துவிட முடியாது. சட்டமன்ற உறுப்பினர்கள் ஏராளமான நிதியொதுக்கீடு பெறவேண்டியிருக்கிறது. இதையும் இணைக்கின்றபோது சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் தொகுதியில் மிகப்பெரிய சிரமத்தை சந்திக்க வேண்டியதிருக்கும். வாக்களித்த மக்களுக்கு பதில் சொல்ல முடியாத நிலை ஏற்படும். ஓரளவு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கொடுக்கலாம். ஆனால், அதுமட்டும் போதுமானதல்ல. தயவு செய்து அரசு இதை பரிசீலித்து, ஏராளமான வீடுகள் பழுதடைந்துள்ள நிலையில், கடந்த காலத்தைப் போல, கூடுதலான நிதியை ஒதுக்கித்தருவதன் மூலம்தான் அந்த மக்களைப் பாதுகாக்க முடியும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்துள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் வரையறுக்கப்படாத வகையில் நிதி இருக்கிறது. முடிந்த வரையில் அந்த நிதி முழுவதையும் பயன்படுத்தினால் ஓரளவுக்கு அந்த வீடுகள் பழுதுபார்க்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.